# Salve  Regina

மலர்: 1 அக்டோபர் 2006 (தனிச்சுற்றுக்கு மட்டும்) இதழ்: 1



அர்ச். பத்தாம் பத்திநாதர்

சேசுவில் அன்பார்ந்த வாசகர்களே மற்றும் கத்தோலிக்க விசுவாசிகளே!

அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபையின் இந்திய தலைமை மடத்திலிருந்து வெளிவந்த 'அப்போஸ்தலர்" என்ற பத்திரிக்கை இப்போது **"Salve Regina"** என்ற புதிய பெயர் மாற்றத்துடன் தமிழகத்தின் கத்தோலிக்க விசுவாசிகளுக்கு மாத இதழாக இந்த ஜெபமாலை மாதத்திலிருந்து வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

இந்த மாத இதழானது நமதாண்டவர் சேசுவின் பத்தினியாகிய ஏக பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைகளை அதன் தூய்மையுடனும், முழுமையுடனும் தருவதிலும், அர்ச்சியசிஷ்டவர்களுடைய வரலாற்றையும், நல்ல கத்தோலிக்க குடும்பங்களை உருவாக்குவதற்கு தேவையான ஆலோசனைகளை பெற்றோர்களுக்கு வழங்குவதிலும், மேலும் சில செய்திகளை தருவதிலும் தனது பக்கங்களைச் செலவிடும். இதில் வரும் கருத்துக்கள், அறிவுரைகள் ஞான வாழ்க்கையில் முன்னேற விரும்பும் ஆன்மாக்களுக்கு உதவும் என உறுதியாக நம்புகிறோம். **"இப்போது உலகில் இருக்கும் அலட்சியம் மற்றும் அதில் இருந்து வரும் பயங்கர சீர்கேடுகளுக்கு முக்கிய காரணம், கடவுளுடைய காரியங்களில் காணப்படும் அறியாமையே ஆகும் என்று சொல்பவர்களோடு சேர்ந்து நாமும் முழுமனதோடு ஒத்துக்கொள்ள வேண்டியதாய் உள்ளது".** ("அச்சர்போ நீமிஸ்" என்ற அர்ச். பத்தாம் பத்திநாதர் 1905-ல் எழுதிய சுற்றுமடல்.)

மேற்கண்ட சுற்றுமடலில் அடங்கியுள்ள அர்ச். பத்தாம் பத்திநாதருடைய வார்த்தைகள் இன்றும் மிகவும் பொருந்தக் கூடியதாக உள்ளது. இப்படிப்பட்ட நிலைமையை சீர்திருத்தவும் மெய்யான தேவ பக்தியையும் தெய்வபயத்தையும் விசுவாசிகளின் மனதில் விதைக்கவும் இந்த பத்திரிக்கையானது தன்னால் இயன்றதைச் செய்யும்.


எங்களுடைய இந்த எளிமையான முயற்சியை "பதிதங்களை அழிக்கும்" ஜெபமாலை மாதாவின் கரத்திலும், இந்திய தேசத்தின் பாதுகாவலர்களாகிய அர்ச். தோமையார், அர்ச். சவேரியார், அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள் மற்றும் நமது குருக்கள் சபையின் பாதுகாவலராகிய அர்ச். பத்தாம் பத்திநாதர் ஆகியோரின் பாதுகாவலிலும், பராமரிப்பிலும் வைக்கிறோம்.

அவர்களே, இம்முயற்சியை ஆசீர்வதித்து, ஆன்ம பலன்களை விளைவித்து திருச்சபை செழுமையடைய உதவுவார்களாக!

அர்ச். பத்தாம் பத்திநாதர் குருக்கள் சபை
பாளையங்கோட்டை

**"மெய்யாகவே மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தன் ஆத்துமம் சேதப்பட்டால் அவனுக்கு பிரயோசனம் என்ன?"** (மத். 16:26)

# அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் 3–வது பொதுச்சபைக் கூட்டத்தின் அறிக்கை



வந். பெர்னார்டு பெஃலே ஆண்டகை

சர்வேசுவரனுடைய அதிமிக மகிமைக்காகவும், ஆன்மாக்களின் இரட்சணியத்திற்காகவும், உண்மையான ஊழியத்தை திருச்சபைக்கு அளிப்பதற்காகவும், ஜுலை மாதம் 3-ம் தேதி முதல் 15-ம் தேதி வரை சுவிட்சர்லாந்து, ஈக்கோனில் நடைப்பெற்ற அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் 3-வது பொதுச்சபைக் கூட்டம், இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சர்வேசுவரனுடைய உதவியைக் கொண்டு, தான் இது வரை செய்து வந்த காரிங்களைத் தொடர்ந்து செய்யவும், தன்னுடைய ஸ்தாபகர் வந்திக்கத்தக்க அதிமேற்றிராணியார் மார்சல் லெ.ஃபவர் ஆண்டகை கொடுத்துச் சென்ற அந்தப் படிப்பினை மற்றும் நடைமுறை வழிமுறைகளைப் பின்பற்றவும், தனக்கு இருக்கும் உறுதியை அறிக்கையிடுகிறது.

கத்தோலிக்க விசுவாசத்தைக் காப்பாற்றுவதில், தனது ஸ்தாபகரின் பாதச்சுவடைப் பின்பற்றி, இச்சபை இவருக்கு வத்திக்கான் சங்கத்தின் மேலும், அதனுடைய மாற்றங்கள் மேலும் இருந்த கருத்தை அவரே தனது உரைகளிலும், பிரசங்கங்களிலும் தெரிவித்தவாறு, குறிப்பாக அவர் 1974 நவம்பர் 21-ம் தேதியில் வெளியிட்ட அறிக்கையை முழுமனதோடு ஆமோதிக்கிறது. அவ்வறிக்கை பின்வருமாறு:

''கத்தோலிக்க விசுவாசத்தின் பாதுகாவலும், அதை பராமரிக்க அவசியமான பாரம்பரியத்தின் பாதுகாவலியாகிய கத்தோலிக்க உரோமாபுரியை, ஞானத்தையும் உண்மையையும் தன்னிடத்தில் கொண்டவளுமாகிய நித்திய உரோமையை நம்முடைய முழு உள்ளத்தோடும், ஆத்துமத்தோடும் பற்றிக் கொள்கிறோம். மாறாக புதிய நவீன உரோமாபுரியை, புதிய புரொட்டஸ்டாண்டு மனநிலையைக் கொண்ட, 2-ம் வத்திக்கான் சங்கத்திலும் அதன் விளைவாக வந்த மாற்றங்களிலும் தன்னை வெளிப்படுத்திய புதிய உரோமாபுரியை நாம் பின்பற்ற மறுக்கிறோம். இதுவரைக்கும் மறுத்தே வந்தோம்.''

கடந்த சில வருடங்களாக உரோமையுடன் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபைக்கு இருந்த தொடர்பு மற்றும் பேச்சுவார்த்தையானது இச்சபை விதித்த 2 முன் நிபந்தனைகள்* எவ்வளவு அவசியமான காரியங்கள் என்பதை இச்சபைக்கு தெளிவாகக் காண்பிக்கிறது. எவ்வாறெனில் இந்த 2 முன் நிபந்தனைகள் திருச்சபைக்கு அதனுடைய பாரம்பரியத்தின் மேல் உள்ள உரிமையை குறைந்தபட்சம் பெற்று தந்து, பெரும் நன்மையை பயக்கும். இதன் மூலம் இச்சபைக்குக் கிடைக்கும் வரப்பிரசாதத்தின் பொக்கிஷம் இனிமேலும் மரக்காலின் கீழ் மறைந்திருக்காது; மேலும் கிறிஸ்துவின் மறையுடலுக்கு மிகவும் தேவையான மருந்தைப் பெற்றுக் கொள்ளும்.

இந்த முன் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையானது சத்திய படிப்பினைகளை குறித்தான ஒரு விவாதத்தை எதிர்நோக்குகின்றது என்றால், அது சத்திய திருச்சபையின் பாரம்பரிய போதனையை திருச்சபை எங்கும் கேட்கும்படி செய்யும் நோக்கமேயாகும் - அதுபோல சில சமயம், உரோமைய ஞான அதிகாரிகளிடம் நமக்கு இருக்கும் தொடர்புகளின் நோக்கம், அவர்கள் மறுபடியும் தமது அடையாளத்தை இழக்காமல், தள்ளிவிட முடியாத திருச்சபையின் பாரம்பரியத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள உதவி செய்ய வேண்டும் என்பதேயன்றி வேறில்லை. இதனுடைய நோக்கம் அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையினுடைய பயனுக்காக மட்டுமோ அல்லது வெறும் ஒருசில நடைமுறை ஒப்பந்தம் செய்வதற்கோ அல்ல. பாரம்பரியமானது திருச்சபையில் தனக்குரிய இடத்தைப் பெறும்போது, "*கருத்து வேற்றுமையை கலைவது (reconciliation) என்பது ஒரு பிரச்சினையாக இருக்காது. மேலும் திருச்சபையினுடைய வாழ்வு மறுபடியும் புத்துயிர் பெற்றுத் தழைத்தோங்கும்*".**

வெற்றியை நோக்கிய இந்த நீண்ட பாதையில், அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் பொதுச்சபைக் கூட்டமானது தனது அங்கத்தினர் அனைவரையும், தங்களுடைய சபையின் ஒழுங்கு வழி காட்டுவது போல தங்களுடைய வாழ்வை, தலைமை குருவின் ஜெபமாகிய திவ்விய பலிபூசையுடன் தங்களையும் ஒன்றித்து அதை தீவிரமாகவும், ஆழமாகவும் வாழ ஊக்குவிக்கிறது. திருச்சபையின் இப்போதைய சீர்கெட்ட நிலைக்கு ஒரு மாற்று மருந்தை, தாங்களும் தங்கள் விசுவாசிகளும், இந்த பரிசுத்தமான வாழ்வை வாழ்வதின் மூலம் தர முடியும். இச்சமயத்தில் நாளுக்கு நாள் அதிக பரிசுத்தத்தனத்தில் வளர முயற்சி எடுப்பதின் மூலம் திருச்சபையில் மலிந்து கிடக்கும் தீமைகளுக்கு தீர்வு காண முடியும். அதாவது குருத்துவத்தைப் புதுப்பிப்பதின் மூலமாய்தான் திருச்சபையை புதுப்பிக்க முடியும் என்பதை நம் சபை அங்கத்தினர் அனைவரும், அவர்களைப் பின்பற்றும் விசுவாசிகளும் நன்றாக மனதிலே இருத்த வேண்டும்.

*1. பாரம்பரிய பூசையை எவ்வித நிபந்தனையுமின்றி அனுமதித்தல். 2. அர்ச். 10-ஆம் பத்திநாதர் சபையின் நான்கு மேற்றிராணியார்களுக்கு விதித்த விலக்கத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வது. **பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பருக்கு வந். லெ.ஃபவர் ஆண்டகை எழுதிய 1988, ஜுன் 2-ம் நாளைய கடிதம்.

# அர்ச்.குழந்தை சேசுவின் தெரசம்மாளின் ஆன்ம தாகம் !

அலெக்சாந்திரியாவைச் சார்ந்த பிரான்ஸினி என்ற கள்வன், பாரீஸ் நகரில் ஒரு பாதுகாப்புப் பெட்டகத்தைக் கொள்ளையிடும் போது மூன்று நபர்களைக் கொலை செய்தான். இவன் கொலை செய்தவர்களில் பதினொரு வயதுள்ள ஒரு சிறுமியும் அடங்குவாள். இந்த கொடூரச் செயலுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டான். அதனை நிறைவேற்றும் நாள் நெருங்கி வருகிறதை அறிந்திருந்தும் தான் செய்த கொடூர பாவத்திற்காக சிறிதேனும் மனஸ்தாபமின்றி இருந்தான். அதுமட்டுமல்லாமல் தான் சிறையில் வாழ்ந்த நாட்கள் முழுவதையும் பாவத்திற்கு இட்டுச் செல்லும் தீயப் புத்தகங்களை எழுதுவதிலும், மொழிப்பெயர்ப்பதிலும் செலவிட்டான். இவன் சிறுவயதில் தான் கற்றுக் கொண்ட ஞான உபதேசங்கள் மற்றும் ஜெபங்களில் தேவமாதா மேல் கொண்டிருந்த பற்று மட்டுமே அவனுடைய ஆன்மாவில் சிறிதளவு மீதி இருந்தது.



இந்த கொடூரப் பாவியின் நிலைமையை, அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாளின் தந்தையான **மார்டின்** சாப்பிடும் வேளையில் கூறினார். இதைக் கேட்ட தெரசம்மாள் மிகவும் மனம் வருந்தினாள். உடனடியாக அவள் அந்தப் பாவியின் ஆத்துமத்திற்காக ஜெபிக்கத் தொடங்கினாள். அதற்காக தனது ஜெபமாலை, பூசை மற்றும் அனைத்தையும் ஒப்புக்கொடுத்து அவன் மனந்திரும்ப மன்றாடினாள். அதோடு பிரான்ஸினியின் மனந்திரும்புதலைக் குறித்து ஒரு அறிகுறி தரும்படியாகத் தினமும் சர்வேசுவரனைக் கெஞ்சி மன்றாடி வந்தாள்.

1887-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ஆம் நாள் அந்தப் பாவியின் இவ்வுலக வாழ்வின் கடைசி நாள் வந்தது. அவனுடைய நித்திய இடத்தைக் குறிப்பதற்காக ஒரு சில மணி நேரமே எஞ்சியிருந்தது. இந்நாள் வரையிலும் அளிக்கப்பட்ட சர்வேசுவரனுடைய வரப்பிரசாதங்களை உதாசீனப்படுத்தி வந்த பிரான்ஸினி திடீரென்று மனம் மாறினான். தனக்கு தண்டனை நிறைவேற்றுபவர்களுக்கு தன்னைத் தானே கையளிக்கும் முன்பு அங்கு நின்று கொண்டிருந்த குருவானவருக்கு சைகை காட்டி அழைத்து அவர் கையில் வைத்திருந்த பாடுபட்ட சிலுவையை பல முறை முத்தி செய்தான். இதைக் கேள்வியுற்ற குழந்தை சேசுவின் தெரசம்மாள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்து போனாள். அதனால் உறுதியடைந்தவள் அச்சமயத்திலிருந்து அப்போஸ்தலிக்க வேட்டையில் தன்னை முழுவதும் கையளித்தாள். அவள் கார்மெல் மடத்தில் நுழைந்தப் பிறகும் பிரான்ஸினியை ஞாபகத்தில் வைத்திருந்து, அவனுக்காக திவ்விய பலிப்பூசையை ஒப்புக்கொடுத்து வந்தாள்.

விசுவாசிகளே! நாமும் அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாளைப் பின்பற்றி, ஆன்மதாகம் கொண்டவர்களாக பாவிகளின் மனந்திரும்புதலுக்காகவும், நமது இந்திய தேசம் சத்திய வேதத்திற்கு வந்து சேரும்படியாகவும் வேண்டிக் கொள்ளக்கடவோம்.

# மாமரியின் தாய்மையின் திருநாள்

**அக்டோபர் - 11**



கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் "சீர்திருத்தவாதிகள்" என்று தங்களையே புகழ்ந்து கொண்டோர், கொள்கைகளில் வேறுபட்டு நின்றார்கள். ஆனால் பரிசுத்த கன்னிமரியாயை எதிர்ப்பதில் மட்டும் ஒன்றுபட்டிருந்தனர். "கத்தோலிக்கத் திருச்சபை பரிசுத்த கன்னிமரியம்மாளுக்கு, அவருடைய குமாரனாகிய சேசு கிறீஸ்துவுக்கு கொடுக்கப்படும் மகிமையையும் புகழையும் கொடுக்கிறது" என்பது அவர்களின் ஒன்றுபட்டக் குற்றச்சாட்டு. ஆனால் இவர்களின் வழிவந்த பிற்காலத்தவர்களாகிய நவீனர்கள் நான்கு நூற்றாண்டுகள் கழித்து இந்த 20-ம் நூற்றாண்டில் அன்னைக்குக் காட்டி வந்த அதே எதிர்ப்பை அவர்களின் மகனுக்கும் காட்டுகின்றனர். அன்று பரி. கன்னிமரியம்மாள் சர்வேசுவரனின் தாய் (Theotokos) அல்ல என்று கூறியவர்கள், இப்போது சேசு கிறீஸ்து சர்வேசுவரனின் குமாரன் என்பதற்கு பாரம்பரியமாகக் கொடுக்கப்பட்டு வந்த அர்த்தத்தை மாற்றி விட்டார்கள். வேறு சிலரோ, சேசு தேவ குமாரன் அல்ல; ஆனால் உலக சீர்திருத்தவாதிகளில் முதன்மையான, நல்லொழுக்கப் போதகர் என்கின்றனர். இவர்களிலும் சிலர் "கடவுள்" என்ற அடைமொழியை சேசுவுக்குத் தந்தாலும் அவரது "தெய்வீகத்தை" ஏற்க மறுக்கிறார்கள்.

## வேதாகமச் சான்று

ஆனால் பரிசுத்த வேதாகமம் வேறு மாதிரியாகக் கூறுகிறது: மங்கள வார்த்தையின் போது கபிரியேல் அதிதூதர் "உம்மிடம் பிறக்கும் பரிசுத்தர் தேவசுதன் எனப்படுவார்…" (லூக். 1:35) என்று கூறி சேசு சர்வேசுவரனின் குமாரன் - தேவ சுதன் என்று தெளிவாக அறிவிக்கிறார். அதோடு பரிசுத்த கன்னிமரியம்மாள் சேசுவோடு எப்போதும் இணைந்துள்ளார்கள் என்பதை, சேசுவை தரிசிக்க வந்தவர்கள்… "பாலனை அவர் தாயான மரியம்மாளோடு கண்"டார்கள் (மத்.2:11) என்று வேதாகமம் தெளிவாகத் தெரிவிக்கிறது. சேசுவின் பகிரங்க வாழ்வு கானாவூர் புதுமையில் ஆரம்பிக்கிறது. அப்போதும் "சேசுநாதருடைய தாயாரும் அங்கே இருந்தாள்…" (அருள். 2:1) என்று சுவிசேஷம் கூறுகிறது. கடைசியாக சேசுவின் சிலுவை மரணத்தின் போதும்… "சேசுநாதருடைய சிலுவையின் அருகே அவருடைய தாயாரும்… நின்று கொண்டிருந்தாள்" (அருள்:19:25) என வேதாகமம் சித்தரிக்கிறது. கத். திருச்சபையின் ''சிறிய மந்தை'', இஸ்பிரீத்துசாந்துவின் வருகைக்காகக் காத்திருந்த போதும், "சேசுநாதருடைய தாயாராகிய மரியம்மாளோடும்" (அப்.நட 1:14) ஜெபத்தில் நிலைத்திருந்தனர் எனப் புகழ் பாடுகிறது. எனவே தேவ அன்னைக்குச் செலுத்தும் மேலான வணக்கம் அவர்களது குமாரனான சேசு கிறீஸ்துவின் மகிமையை எந்த வகையிலும் குறைக்காமல் சேசு தேவ குமாரன் என்ற சத்தியத்தை இன்னும் அதிக ஆழமாக உறுதிப்படுத்துகிறது. பரிசுத்த அன்னை எப்பொழுதும் தன் மகனுடனே இருந்தார்கள். அன்னையின் உரிமையையும் மகிமையையும் குறைக்க நினைப்பவர்கள் சிறிது காலத்திற்கு பின் அவர்களது மகனையும் மறுப்பார்கள் என்பது உறுதி. எனவே தாயும் மகனும் இணைந்தே வாழ்கிறார்கள். இணைந்தே துயரப்படுகிறார்கள்.

## சேசுவின் தேவ – மானிட ஒன்றிப்பு

கான்ஸ்டான்டிநோபிளின் பிதாபிதாவான நெஸ்டோரியஸ், "கிறீஸ்துவில் இரண்டு ஆள் தன்மைகளைக் கொண்டிருப்பதால் மரியன்னை மனித கிறிஸ்துவிற்கு மட்டுமே தாயாக இருக்கிறாள். ஆகவே அவள் கடவுளின் தாய் அல்ல'' என்ற தப்பறையை போதித்தார். இவரை 5-ஆம் நூற்றாண்டில் எபேசு நகரில் கூடிய திருச்சங்கம் கண்டித்து "சேசு தெய்வ ஆள் - தேவ, மனித சுபாவங்களை அந்த ஒரே ஆளில் கொண்டிருந்தார்" என்று பிரகடனப்படுத்தி சேசுவின் தேவ - மானிட ஒன்றிப்பை (Hypostatic Union) உறுதி செய்து பரிசுத்த கன்னிமாமரி கடவுளின் தாய் என்று விசுவாச சத்தியமாக அறிவித்தது. (கி.பி. 431)

எபேசு பொதுச்சங்கத்திற்கு 15 நூற்றாண்டுகள் கழித்து பரிசுத்த தந்தை 11-ஆம் பத்திநாதர் ''Lux Veritatis'' என்ற சுற்று மடலை எழுதினார். அதில் எபேசின் நிகழ்வுகளை நினைவு கூர்ந்து "இரு சுபாவ ஒன்றிப்புப்" பற்றி கூறும்போது ''சேசுவின் இருசுபாவம்'' வீழ்ந்தால் ''மனிதவதார'' பரம இரகசியமும் இதன் மீது ஊன்றி நிற்கும் ''மனித இரட்சணியமும்'' அதை நமக்கு பெற்றுத்தரும் பரிசுத்த கத்தோலிக்கத் திருச்சபையும் தானாக அழிந்து ஒழிந்து போகும். இந்த பரம இரகசியம் நிலை நிறுத்தப்பட்டதால் மனிதகுலம் முழுமையும் இவ்வுலகத்திற்கு அடுத்த சகலமும் மேலான நிலைக்கு உயர்த்தப்பட்டு, படைப்புக்கள் அனைத்தும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத உன்னத நிலையை அடைகின்றன. இதன் சிறப்பைப் பற்றி அவர் மேலும், ''பரிசுத்த அன்னை கன்னிமரியம்மாள் மனித மீட்பரின் தாயானதால் நமக்கும் அவள் ஒரு வகையில் அன்னையாகிறாள். கடவுளின் திட்டத்தின் படியே சேசுவும் நமக்கு சகோதரர் ஆகிறார். எனவே அன்னை மீது முழு நம்பிக்கையுடன் நமது உடமைகள், இன்ப துன்பங்களை ஒப்படைக்கலாம்" என கூறுகிறார். சிறப்பாக மக்களின் சிநேகக் குறைவு, விசுவாசக் குறைவு, தனிப்பட்ட மற்றும் பொது ஒழுக்கக் குறைவு காரணமாக அல்லலுறும் திருச்சபையை, அந்தத் தாயிடம் ஒப்படைக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலே கூறப்பட்ட சீர்கேடுகளைப் பற்றி நினைக்கும் போது, தேவமாதா மீதான பக்தி குறைவினால் ஏற்படும் விளைவு நம் கண் முன் வருகிறது. நாம் இக்காலத்தின் ''அஞ்ஞானம்'' பற்றி அடிக்கடி கேள்வியுறுகிறோம். ஒழுக்கநெறி குறைவு, விசுவாசத் தளர்வு, அதனால் அஞ்ஞானத்தை நோக்கிச் செல்லுதல் என்பது ஒரு தவிர்க்கமுடியாத விளைவாக இருக்கிறது. இன்று உலகம் நவீன, குழப்பமான நாகரீகம், புண்ணிய வாழ்வின் வீழ்ச்சி, நல்ல ஆரோக்கியமான குடும்ப வாழ்வின் மறைவு, கிறீஸ்தவ தாம்பத்திய வாழ்க்கையின் சிதைவு மற்றும் பெற்றோர் தங்கள் கடமைகளை கைவிடுதலால் ஏற்படும் விளைவு, இவைகளின் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதோடு விவாகரத்து, சிசுகொலை, பெண்ணினத்தையும் குழந்தைகளையும் இழிவுபடுத்துதல் போன்றவை இந்த அஞ்ஞான சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவையாக இருக்கின்றன. எல்லாக் காலங்களிலும் தீமைகளை அழிக்கும் வல்லமையைக் கொண்டுள்ள தேவதாயின் தாய்மையில் அனைத்துப் பெண்களின் தாய்மையானது ஆசீர்வதிக்கப்பட்டதாய் இருக்கிறது. இப்போது இவ்வுலகத்திற்கு கடவுளின் தாயும் மனுக்குலத்தின் தாயுமாகிய தேவமாதாவுடைய ஆசீர்வதிக்கப்பட்ட ஆளுகை தேவையாய் இருக்கிறது. மனுக்குலத்தின் துவக்கமும் அடித்தளமுமாகிய குடும்ப வாழ்வு அதனுடைய பரிசுத்தத்தனத்திலும், மேன்மையிலும் பாதுகாத்துப் பராமரிக்கப்பட வேண்டுமானால், தேவமாதாவுடைய பாதுகாவலும், ஆசீர்வாதமும் தேவை. இதை நினைவில் கொண்டே தான் பரிசுத்த பாப்பரசர் 11-ஆம் பத்திநாதர் மகா பரிசுத்த அன்னையின் பக்தியை வளர்க்க வேண்டி, ''மாமரியின் தாய்மையின்'' திருநாளை அக்டோபர் 11-ஆம் தேதி கொண்டாடும்படி பணித்துள்ளார்.

# கத்தோலிக்கக் குடும்பத்தின் மேன்மை

"கத்தோலிக்கக் குடும்பங்களைக் காக்க ஒரு சிலுவைப் போர் **(Crusade)** அவசியம்" என்று மிக.வந். அதிமேற்றிராணியார் மார்செல் லெ.ஃ.பவர் ஆண்டகையவர்கள் 1979–ஆம் ஆண்டில் தமது ஜுபிலிப் பிரசங்கத்தில் கூளுரைத்தார். ஆம்! முன்பு எப்போதையும் விட இக்காலத்தில், சமுதாயத்தைக் காக்க, இல்லங்கள் அனைத்தும் கிறீஸ்தவமயமாக்கப்பட வேண்டும். ஏனெனில் சாத்தான் இன்று குடும்பங்களை எல்லாப் பக்கங்களிலிருந்தும் தாக்குதல் செய்து கொண்டிருக்கிறான்.

இந்தக் கட்டுரைத் தொடர் ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்தைச் சேர்ந்த அர்ச். பத்தாம் பத்திநாதர் சபையின் ஒரு குருவானவர் ஆற்றிய உரைகளின் தொகுப்பான **"The ideal of the catholic family"** என்ற சிறு நூலின் தமிழாக்கமாகும். இது பல பெற்றோர்களுக்கு, கடவுள் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கும் உன்னத கடமைகளை உணர உதவியாக இருக்கும் என நம்புகிறோம். இப்புத்தகத்தில் திருச்சபையின் பெரிய ஞான ஆசிரியர்களான அர்ச். ஆசீர்வாதப்பர், அர்ச். சாமிநாதர் மற்றும் அர்ச். இஞ்ஞாசியாரின் ஞான போதனைகளும் சேர்க்கப்பட்டுள்ளது.

நமது இந்த எளிய முயற்சி மிகுந்த பலனளிக்கும்படியாக ஜெபிக்கும்படி நமது அதிமேற்றிராணியார் லெ.ஃ.பவர் ஆண்டகையவர்களை மன்றாடுகிறோம். ஏனெனில் அவர் அருமையான கத்தோலிக்கக் குடும்பத்திலிருந்து வந்தவர். அவர் தமது மகன்களான சபைக் குருக்கள், குடும்பத்தின் அப்போஸ்தலத்துவ ஆர்வத்தோடு கூடிய குருத்துவத்தை உணரும்படி விரும்புகிறார். "அனைத்தையும் கிறீஸ்துவில் புதுப்பித்தல்" என்பதே அவரது இதயத்தின் தணியாத ஆவல். அவரது இந்த ஆவல், குருக்கள், துறவியர், தந்தை, தாய்மார் மற்றும் பிள்ளைகள் என அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவரும் புனிதர்களாக முனையாவிட்டால் நிறைவேறாது. இப்போது மோட்சத்தில் சர்வேசுவரனை முகமுகமாயத் தரிசித்து மகிழ்ந்து கொண்டிருக்கும் அவர், நாமும் ஒரு நாள் அவரோடு நித்திய ஆனந்தத்தில் திகழ ஜெபிப்பார். இந்தத் தொடரை நமது அதிமேற்றிராணியார் ஆண்டகையவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

முதல் உரை:

## கத்தோலிக்க இல்லம்

அன்பார்ந்த பெற்றோர்களே,

அர்ச். பத்தாம் பத்திநாதர் பாப்பானவரால் "நவீன காலத்தின் மிக உந்நதமான புனிதை" என்று அழைக்கப்பட்ட அர்ச். குழந்தை சேசுவின் தெரெசம்மாள் தமது கடைசிக் கடிதங்களில் ஒன்றில்: "... நல்ல கடவுள் பூமியை விட மோட்சத்துக்கு அதிக தகுதியான ஒரு தந்தையையும், தாயையும் எனக்குத் தந்தார்..." என்று குறிப்பிட்டுள்ளாள். அவளது இந்த வார்த்தைகள், லீசியே பேராலயத்தின் பின்புறத்தில் உள்ள அவளது பெற்றோர்களான மார்டின், ஸீலிமார்ட்டினின் கல்லறைகளில் பொறிக்கப்பட்டுள்ளது. தாய் திருச்பையும் அவர்களை புனிதர்களாக உயர்த்த முனைந்து கொண்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? உண்மையான கத்தோலிக்க இல்லத்தில் தான் குழந்தைகளுக்கு சிறப்பான உருவாக்கம் கொடுக்கப்படுகிறது என்பதே. அர்ச். தெரசம்மாளின் புனித வாழ்வின் ஊற்றுக்கண் - துவக்கம், இரண்டு நல்ல கத்தோலிக்கக் கிறீஸ்தவர்களான பெற்றோர்களின் இதய ஒன்றிப்பிலிருந்து வந்தது! கர்தினால் மெர்ஸியர்: "ஒரு எடுத்துக்காட்டான குடும்பத்தினுடைய கனி - விளைவு அவள்! என்பதை அறிந்து எவ்வளவு மகிழ்ச்சியடைகிறேன்! இதனையே உலகெங்கும் செயல்படுத்த நாம் தயங்கக் கூடாது..." என்று வியந்து போகிறார். ஆம்! அன்பான நண்பர்களே, இதில் எந்த சந்தேகமும் இல்லை. நீங்கள் எந்த வழியில் உங்கள் பிள்ளைகளை வளர்த்து வருவீர்களோ, அந்த வழியில் தான் அவர்கள் ஞான வாழ்விலும் வளர்வார்கள்.

நாம் முதலில், நமது இறுதி குறிக்கோள் என்ன என்பதை மனதில் கொள்வோம் - அது மோட்சம்! என்பது உங்களுக்குத் தெரியும். அனைத்து உலகும் சர்வேசுவரனின் அதிமிக மகிமைக்காகவே உண்டாக்கப்பட்டன. நட்சத்திரங்கள், மலைகள், மரங்கள் மற்றும் பறவைகள் என எல்லாமும்,... நாமும் தான் கடவுளின் மகிமைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டோம். ஆனால் நாம் கடவுளை மகிமைப்படுத்துவதில்லை. நாம் புனிதர்களானாலொழிய மெய்யான மகிழ்ச்சியைக் காணமாட்டோம். ஒரு புனிதர் என்பவர்... தேவ இஷ்டப்பிரசாத நிலையில் மரித்தவர்; உத்தரிக்கிற ஸ்தலத்தில் தமது பாவங்களுக்காக உத்தரித்து, இப்போது மோட்சத்தில் இருப்பவர் தானே ஒரு புனிதர் என்பவர். உங்கள் குழந்தைகள் உங்களுக்கு பரிசுத்த பொக்கிஷமாகக் கடவுளால் கொடுக்கப்பட்டுள்ளார்கள். அவர்களது அழியாத ஆன்மாக்களுக்கு நீங்கள் கணக்குக் கொடுக்க வேண்டும்.

## கிறிஸ்தவக் கல்வியின் நோக்கம்!

கத்தோலிக்கப் பெற்றோர்களாகிய நீங்கள் மனிதனின் முடிவு சுபாவத்துக்கு மேலானது என்பதை உணர வேண்டும். நாம் அனைவரும் சர்வேசுவரனை மோட்சத்தில் முகமுகமாய்த் தரிசிக்கும் நித்திய பாக்கியத்தில் வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். இதுவே கிறீஸ்துவப் படிப்பினை - கல்வியின் இறுதியான குறிக்கோள். நமது குழந்தைகளுக்கு இந்த மகா உன்னதமான பரிசைப் பெற்றுத் தருவதாகவே இருக்க வேண்டும். நமது உடல் நலம், பணம், அடையும் வெற்றி எதுவும் உண்மையிலேயே ஒன்றுமில்லை! அதனால் தான் கஸ்டீலிய அரசியான பிளான்ச் அம்மையார் பிரான்ஸ் நாட்டின் எதிர்கால அரசரான அர்ச். 9-ம் லூயிஸிடம்: "என் மகனே, நீ சாவான பாவ அந்தஸ்தில் இருப்பதைக் காண்பதை விட, நீ இப்போதே எனது காலடியில் விழுந்து சாவதையேக் காண விரும்புகிறேன்" என்று சொல்ல முடிந்தது! இதைப் பற்றி நாம் சிந்திக்கும் போது நித்திய தண்டனை ஒன்றே உண்மையான தீமையென்று தெரிகிறதல்லவா? ஆகையால் நமது குடும்பத்தை கத்தோலிக்கக் கண்ணோட்டத்தில் காண்போமாக. அதாவது தேவ சம்பந்தமான புண்ணியமாகிய விசுவாசம் என்ற வெளிச்சத்தில் பார்ப்போமாக.

இதுவரை கிறீஸ்தவக் கல்வியின் இறுதி நோக்கத்தை நமது கண்கள் முன்பாகக் கொண்டு வந்தோம். இப்போது நமது இல்லங்களில் ஒரு உண்மையான கத்தோலிக்கச் சூழ்நிலையின் அவசியத்தைப் புரிந்து கொள்வது மிகவும் நல்லது. அஞ்ஞானக் காலங்களில் கூட இல்லங்கள் பரிசுத்தமானதாகக் கருதப்பட்டு வந்துள்ளன. கிரேக்கப் புலவர் ஓமர் என்பவர் "ஒடிஸியேயூஸின் இல்ல வருகை" என்பதை ஒரு புத்தகம் முழுவதிலும் எழுதியுள்ளார். அஞ்ஞானிகளான உரோமையர் கூட தங்களது இல்லத்தை ஒரு பரிசுத்த இடமாகப் பாவித்து வந்துள்ளனர். சிறு குழந்தைப் பிராயத்திலிருந்து, இளமை மற்றும் முதுமை வரையிலும் உள்ள குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும், அவர்களை அந்தந்த பருவத்தில் பாதுகாக்கவென்று வெவ்வேறு வகையான வீட்டுத் "தேவதைகளை" ஏற்படுத்தியிருந்தார்கள். குடும்ப வாழ்வின் ஒவ்வொரு செயலுக்கும் தனிப்பட்ட "தெய்வத்தை" அழைத்து மன்றாடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் கடவுள், தாமும் உலகில் தமக்கு பெற்றோரைத் தேர்ந்தெடுத்ததினால் தமது மனிதவதாரத்தால் குடும்ப அமைப்பை முழுவதுமாக சுபாவத்துக்கு மேலானதாக மாற்றினார். மகா பரிசுத்த மரியம்மாளிடம் தமது மனுஷீகத்தை எடுத்ததால் சேசு மரியாயின் உண்மையான குமாரனாக இருந்தார். அர்ச். சூசையப்பர், மரியாயின் கணவராக திருமணப்பந்தனத்தினால் நமதாண்டவரின் தந்தைக்குரிய ஸ்தானத்தைப் பெற்றிருந்தார். சேசு உண்மையாகவே இஸ்பிரீத்துசாந்துவினால் பரிசுத்த கன்னிமரியம்மாளின் அமலோற்பவ சரீரத்திலிருந்து பிறந்தவராக இருந்தாலும் அவர்களின் திருமணத்தால் சூசையப்பரின் தந்தைக்குரிய ஆளுகைக்குட்பட்டிருந்தார். தேவ பராமரிப்பின் நியமனத்தால் சூசையப்பர் குழந்தை சேசுவை ஏற்று வளர்க்க ஏற்படுத்தப்பட்டார். சேசு கிறீஸ்து, மரியம்மாள் - சூசையப்பரின் பரிசுத்த திருமணப் பந்தனத்தினால் பிறந்தவராயிராமல், அதில் உட்பட்ட கனியாயிருக்கிறார்.

## திருக்குடும்பத்தின் மாதிரிகை!

ஆகையால், நாம் ஒரு தந்தை, ஒரு தாய், ஒரு சேயையும் பெற்றிருக்கிறோம். திருக்குடும்பம் எல்லாக் கிறீஸ்தவர்களுக்கும் நிறைவான ஒரு மேல்வரிச் சட்டமாக இருக்கிறது. அன்புள்ள பெற்றோரே, நாசரேத்தூரை நோக்கிப் பாருங்கள். எல்லாவற்றிலும் கடவுளை மட்டுமே மையமாகக் கொண்டுள்ள இந்த இல்லத்தின் அழகைக் காணுங்கள். சேசு, மரி, சூசை - கத்தோலிக்கக் குடும்ப வாழ்விற்கு ஒரு மாதிரிகையை நமக்குத் தருகிறார்கள். அவர்களிடம் நிலவிய புண்ணியங்களான தாழ்ச்சி, கீழ்ப்படிதல், அன்பு ஆகியவற்றை நாம் தியானித்தால் அவர்களது இதயங்களில் நிலவிய சமாதானத்தின் மகிழ்ச்சியின் இரகசியத்தைப் புரிந்து கொள்வோம்.

அர்ச்சியசிஷ்டவர்களின் வாழ்க்கையைப் பார்ப்போமேயானால் அவர்களது குழந்தைப் பருவ நாட்களில் பெற்றோர்களின் பங்கு மேலானதாக இருக்கும். அர்ச். பத்தாம் பத்திநாதரின் தாயாரான சார்த்தோ அம்மையாரின் வாழ்க்கையையோ அல்லது அர்ச். ஜாண் போஸ்கோவின் அன்னையான மம்மா மார்க்கரித்தாவின் வரலாற்றையோ வாசித்தால் இதனை நாம் நன்குப் புரிந்து கொள்ளலாம். குழந்தைகள், தங்களுடைய ஞான வாழ்வை புத்தகங்களிலிருந்தோ அல்லது ஏன், குருக்களிடமிருந்தோ கூட முதலில் பெறுவதில்லை. மாறாக, கத்தோலிக்க இல்லத்தின் வாழ்விலிருந்து மட்டுமே தங்களின் முதல் ஞான உருவாக்கத்தைப் பெற்றுக் கொள்கிறார்கள். பெற்றோர்களே, முதன் முதலில் கிறீஸ்தவ ஞான ஜீவியத்தை இளைய ஆன்மாக்களுக்குக் கொடுக்கும் பிரதான வாய்க்காலாக இருக்கிறார்கள். ஒரு சிறு குழந்தை கடவுளைப் பற்றிய முதல் அடையாளங்களை சிறிய வழிகளில் பெற்றுக் கொள்கிறது: அது எப்படியெனில், எப்போதும் கனிவுடனும், பொறுமையுடனிருக்கும் தமது தாயின் அன்பைப் பார்க்கும் போது, சர்வேசுவரனுடைய நன்மைத்தனத்தைப் புரிந்து கொள்கிறது. வீட்டிற்குத் தேவையான உணவைப் பெற, உழைத்துப் பணம் ஈட்டும் தமது தந்தையின் முயற்சிகளைக் காணும் போதெல்லாம் கடவுளுடைய தேவ பராமரிப்பைக் கண்டு கொள்கிறது.

சிறுகுழந்தைகளுக்கு மட்டுமல்லாமல் குறிப்பாக பெரியோர்களிடம் கேள்விகளைத் தொடுக்கும் குணமுள்ள இளம் பருவத்தினருக்கும் கூட, பெற்றோர்களின் முன்மாதிரிகை மிகவும் அவசியம். பெற்றோரே, உங்கள் குழந்தைகள் கீழ்ப்படிதலை அனுசரிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அவர்கள் முன்பாக சண்டை

சச்சரவுகளைச் செய்யாதீர்கள். அவர்கள் பிறர் சிநேகத்தைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், உங்கள் அயலாரைப் பற்றி புரணி பேசாதீர்கள். அவர்கள் ஜெபிக்க விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டுமென நீங்கள் விரும்பினால், நீங்கள் ஜெபிப்பவர்களாக இருங்கள். அர்ச். குழந்தை சேசுவின் தெரசம்மாள் இரவு ஜெபத்தில் ஈடுபடும் தமது தந்தையைப் பற்றி கூறுகையில்: "புனிதர்கள் எப்படி ஜெபிக்கிறார்கள் என்பதை என் தந்தையைப் பார்த்து தெரிந்து கொண்டேன்" என்கிறாள். நான் சிறுவனாக இருக்கும் போது ஒரு முறை எனது தந்தையின் படுக்கை அறையில் எனது தந்தை முழந்தாளிட்டு ஜெபித்துக் கொண்டிருப்பதைக் காண நேரிட்டது. அந்தக் காட்சி பிற்காலத்தில், எனது கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாத்துக் கொள்ள எனக்கு மிகவும் உதவியது.

பெற்றோர்களின் முன்மாதிரிகை மட்டுமல்லாது வீட்டிலுள்ள நல்லதோ, கெட்டதோ அனைத்துமே குழந்தையின் ஆன்மாவில் தாக்கத்தை ஏற்படுத்தும். நமது சரீரம் தட்பவெப்ப மாற்றங்களான வெயில், குளிர் மற்றும் சுற்றுச்சூழலில் இருக்கும் தூசிகள், நுண்கிருமிகளால் பாதிக்கப்படுவது போல, நாம் வாழும் சூழ்நிலைகளும் நமது ஆன்மாவில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன. இப்போது நாம் பெரிய இக்கட்டான நிலையில் உள்ளோம். மிகவும் வருந்தத்தக்க உண்மை என்னவென்றால், சில பெற்றோர்கள் தங்கள் இல்லங்களில் கத்தோலிக்க சூழ்நிலைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதே! உலகத்தன்மை, குடும்பத்தினரின் ஞான வாழ்வை நாசம் செய்ய அனுமதிக்கப்படும் நிலையாக உள்ளது. உண்மையில் இத்தகைய இல்லங்கள் வெறும் பெயரளவிலேயே தான் கத்தோலிக்கமாக உள்ளதே தவிர, உள்ளார்ந்த நிலையில் கத்தோலிக்க வாழ்வை, விசுவாசத்தைக் கொண்டிருக்கவில்லை.

உதாரணமாக, உங்கள் பிள்ளைகளின் அறைகளில் பாடுபட்ட சிலுவை மற்றும் புனிதர்களின் படங்களுக்குப் பதிலாக சினிமாக்காரர்களின் ஆபாசமான படங்கள் இருப்பதைக் காணலாம். *(இப்போது குழந்தைகள் அகோர, தோற்றமுள்ள அரக்கர்களின் பொம்மைகளையும், படங்களையும் வைத்திருப்பதைக் காணலாம். இன்று நமது தமிழ்நாட்டுப் பள்ளி மாணவர்கள் பயன்படுத்தும் நோட்டுப்புத்தகங்கள், ஜாமெட்ரி பாக்ஸ்களிலும் கூட நடிகர், நடிகைகளின் படங்களும், அகோர அரக்கர்களின் படங்களும் காணப்படுகின்றன)* - ஆசிரியர் கூற்று. ஆகவே தங்கள் இல்லங்களில் கத்தோலிக்கச் சூழ்நிலைகளை அமைத்துக் கொள்ளும் கடமையை தவறவிடுகின்ற பெற்றோர்கள் தங்களது அழைத்தலிலிருந்து தவறுகிறார்கள்.

அன்பார்ந்த நண்பர்களே! வீடுகளில் ஒவ்வொரு காரியங்களும், பொருட்களும் திருச்சபையின் போதனைகளுக்கு ஏற்ப அமைந்திருந்தால் அவை நாம் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் வாழ உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மாறாக வீடுகளில் உலக போக்குகளும், பாவச் சந்தர்ப்பங்களும் நிறைந்து காணப்பட்டால், அங்குள்ளோர் ஒவ்வொருவரும் நித்திய இரட்சணியத்தை அடைவது மிகவும் கடினமானதாக இருக்கும். சில சமயங்களில் கத்தோலிக்கச் சூழ்நிலைகள் உள்ள வீடுகளில் கூட, பிள்ளைகள் தவறிப் போக நேரிடலாம். அந்த எதிர்பாராத நிலைக்குப் பெற்றோர்கள் காரணமல்ல. சில வீடுகளில் பெற்றோர்களில் ஒருவர் கத்தோலிக்கர் அல்லாதவராக அமைந்து விடலாம். இதனாலும் ஒருவர் விரும்பினாலும் மற்றவருடைய ஒத்துழைப்பின்மையால் சிறந்த கத்தோலிக்கச் சூழ்நிலையை அமைக்க முடியாது போய் விடலாம்.

(தொடரும்)




<u>உங்களது சந்தா மற்றும் கேள்விகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:</u>

Society of St. Pius X
#1, Marcel Lefebvre Place, Annie Nagar, Seevalaperi Road,
Palayamkottai, Tirunelveli – 627 002.

**"ஓ பரிசுத்த கன்னிமரியாயே! கடவுளின் தாயாரே, உம்மை அறிந்து கொள்வது நித்திய வாழ்விற்கு வழியாக இருக்கிறது; உமது வல்லமையை பறை சாற்றுவது நித்திய இரட்சணியத்தினுடைய வழியாக உள்ளது." — அர்ச். பெனவெந்துார்**

## தமிழகத்தில் பாரம்பரிய லத்தீன் திவ்விய பலி பூசை நடைபெறும் இடங்களும் அதன் முகவரியும் :

**பாளையங்கோட்டை:**

அர்ச். தமதிருத்துவ குருக்கள் இல்லம்,
ஆன்னி நகர், சீவலப்பேரி ரோடு,
பாளையங்கோட்டை. 627 002.
தொலைபேசி எண்: 0462 - 2572389; 2586201

**சிங்கம்பாறை :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
சிங்கம்பாறை. முக்கூடல் அருகில்,
திருநெல்வேலி மாவட்டம்,
தொலைபேசி எண்: 0462 - 2572389

**கிறீஸ்துராஜபுரம் :**

கிறீஸ்துராஜா ஆலயம்,
கிறீஸ்துராஜபுரம், ஐரேனிபுரம் (P.O.),
கன்னியாகுமரி மாவட்டம்.
தொலைபேசி எண்: 04651 - 294785.

**நாகர்கோவில் :**

மேல இராமன்புதுார்.
தொலைபேசி எண்: 0462 - 2572389

**தூத்துக்குடி :**

அர்ச். பிரான்ஸிஸ் சவேரியார் ஆலயம்,
கேலெப் ஹோம்,
88B, வெற்றிவேல்புரம், (முருகன் தியேட்டர் அருகில)
தூத்துக்குடி.
தொலைபேசி எண்: 9942707246

**ஆசாரிப்பள்ளம் :**

அர்ச். அந்தோணியார் ஆலயம்,
மேல ஆசாரிபள்ளம், கன்னியாகுமரிமாவட்டம்.
தொலைபேசி எண்: 0462 - 2586201

**திருச்சி :**

No-7, ஜவஹர் தெரு, 15-வது குருக்குத் தெரு,
குமரன் நகர், திருச்சி - 17
தொலைபேசி எண்: 0431 - 2770042

**சென்னை :**

அர்ச். அந்தோணியார் மெட்ரிக்குலேஷன் பள்ளி
வளாகம்,
சின்ன மலை, சென்னை - 600 015.
தொலைபேசி எண்: 044-22355389

## MASS CENTRES IN OTHER STATES

**Bombay / Bandra (MH) :**

National College,
Bandra.
Tel : 022 - 28079680

**Bombay / Malad (MH) :**

2nd Floor, Gratias Manae Building,
First Tank Road, Orlem.
Tel : 022 - 28079680

**Bombay / Vasai (MH) :**

St. Gonsalo Garcia Orphanage,
Bassein Fort, Vasai.
Contact : Gilbert Nunes.
Tel : 0250-2328429

**Bangalore :**

Mr.Benny Joseph,
Tel : 09448067670

**Goa :**

Mr.Salvador Do Mundo,
Opp: Bus Stand, Benaulim, Rio Sal Estates,22
Duplex Apts. Contact : Mr. Joachim.
Tel : 0832-7344333